**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 14.08.2025**

**O.S. 196/2011**

**வா.சா. 1 - முத்தம்மாள்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வழக்கு பட்டிகை சொத்தை கிரயம் வாங்கும் சமயத்தில் வில்லங்கங்கள் பார்த்தேன் என்றால் சரிதான். சுமார் 60 வருடத்திற்கு வில்லங்கம் பார்த்தேன் என்றால் சரிதான். வில்லங்கசான்றிதழ் கைவசம் இருக்கிறது என்றால் சரிதான். என் கைவசம் இருக்கும் வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். வில்லங்கம் பார்த்தபோது வில்லங்க சான்றிதழில் அடமானம் போடப்பட்டதாக இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வழக்கு பட்டிகை சொத்தின் மீது வில்லங்கம் இருந்தது அது தெரிந்தும் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சுசீந்திரம் ஊரில் அக்கரையில் கடைத்தெருவில் கதவு எண். 2/93 ல் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்து ஆதியில் யாருக்கு உரிமைப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் அருணாச்சலம், ராமலெட்சுமி என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் தான் இவ்வழக்கில் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அருணாச்சலம், ராமலெட்சுமி இருவரை தவிர வேறு யாரிடம் இருந்து கிரயம் பெற்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த வருடம் மாதம் கிரயமாக பெற்றேன் என்றால் சுமார் 21 வருடம் இருக்கும் தேதி ஞாபகம் இல்லை.

நான் சொல்வது போல் அருணாச்சலம், ராமலெட்சுமி ஆகியோரிடம் எவ்வித கிரயமும் பெறவில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து ஆதியில் மாடத்தி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மாடத்தியின் மகன் அருணாச்சலம் மூப்பனார் அருணாச்சலம் என்பவருக்கு அடமானம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி அடமானத்தை அருணாச்சலத்தின் மகள் மீனா என்பவர் made over பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். அருணாச்சலம் மூப்பனாருக்கு 5 மகள்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அருணாச்சலம் மூப்பனாருக்கு சங்கு முத்து, வேலம்மாள், சரஸ்வதி, மாடத்தி மற்றும் மீனா ஆகிய ஐந்து பெண்மக்கள் உண்டு என்றால் எனக்கு தெரியாது. நான் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மீனா என்பவருக்கு குழந்தை இன்றி கணவருக்கு பின்பு இறந்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீனா காலஞ்சென்று விட்டதால் இதர நான்கு சகோதரிகள் வாரிசுகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நான்கு வாரிசுகளையும் விட்டு மீனா காலஞ்சென்று விட்டதால் வழக்கு பட்டிகை சொத்து மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தும் மேற்படி வாரிசுகளுக்கு உரிமைப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாரிசுகளுக்கு கிடைத்த உரிமையின் படி பிரதிவாதிகள் 10.07.2007 ல் நகர்புற புல எண். Q17/2015 ல் உள்ள 3 சென்ட் 380 சதுர லிங்ஸ் கட்டிடத்தை பாகப்பிரிவினை செய்து விட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினைக்கு பின் தான் பிரதிவாதிகள் என்னை தொந்தரவு செய்வதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

எந்த தேதியில் பிரதிவாதிகள் என்னை தொந்தரவு செய்வதார்கள் என்றால் தெரியாது தேதி நியாபகம் இல்லை. பிரதிவாதிகள் என்னை தொந்தரவு செய்வதாக

காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். புகார் கொடுத்த தேதி தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. மேற்படி புகாரின் அடிப்படையில் காவல்நிலையத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்றால் மேற்கொள்ளப்படவில்லை. காவல்நிலையத்தில் நடவடிக்கை மேற்கொள்ளாததால் மேலதிகாரிகளுக்கு புகார் அளித்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் என்னை தொந்தரவு செய்யவில்லை நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரகடனம் ஏற்படுத்தியதாக கூறுவதும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரயஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு கிரயம் கொடுப்பதற்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரயம் எழுதி கொடுத்த அழகப்பன் அவருக்கு கிரயம் எழுதிக்கொடுப்பதற்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. அழகப்பன் பவர் மூலமாக கிரயம் கொடுத்தார் மேற்படி பவர் செல்லாது என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த நபர்களுக்கு வழக்கு பட்டிகை சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் என் கைவசம் இருக்கிதா என்றால் அது பற்றி தெரியவில்லை. மேற்படி பொது அதிகார ஆவணம் சட்டத்திற்கு புறம்பான ஆவணம் அதன் மூலம் கிடைக்கப்பெற்ற கிரய ஆவணம் என்பதால் நான் பொது அதிகார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சட்டத்திற்கு புறம்பான பொது அதிகார ஆவணத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற கிரய ஆவணம் சட்டத்திற்கு புறம்பானது ஆகையால் அது செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 றோடு தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.2, முதல் 4 வரை உள்ள ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 வழக்கு தாக்கல் செய்யும் ஒரு சில நாட்களுக்கு முன்பு வழக்கு தாக்கல்

செய்ய வேண்டி ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

ராமலெட்சுமி என்பவருக்கு எக்காலத்திலும் வழக்கு பட்டிகை சொத்தில் உரிமை ஏற்பட்டதில்லை ஆகையால் அவரது வாரிசுகள் என்று கூறக்கூடிய மணி, சுப்பையா, வள்ளியம்மாள், முத்தம்மாள, கல்யாணி, ரேணுகா, சுஜாதா மற்றும் அழகப்பன் ஆகியோருக்கு எந்த உரிமையும் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. ராமலெட்சுமியின் மற்றொரு மகனான வேலாயுதம் இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 மோசடியாக உண்மையை மறைத்து பிரதிவாதிகளின் உண்மைக்கு உடமைக்கும் மாறாக தயார் செய்யப்பட்ட கிரய ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 யை ரத்து செய்ய கோரி உரிமை கோருவதற்கு பிரதிவாதிகளுக்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் சமுதாய வழக்கப்படி பெண்களுக்கு திருமணத்தின் போது நகையும், பணமும், பொருட்களும் கொடுப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பெண்களுக்கு கொடுப்பதால் குடியிருக்கும் சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 எழுதி கொடுத்த அழகப்பன் பெயரில் பட்டா, சிட்டா உள்ளதா என்றால் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். வா.சா.ஆ.1 எழுதிகொடுத்த அழகப்பன் பெயரில் பட்டா சிட்டா எதுவும் இல்லை இருந்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு சொத்து கிரயம் தந்த நபர்களுக்கு உரிமை இல்லாத போது அதை பெற்ற எனக்கும் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் வழக்கு பட்டிகை சொத்தை அனுபவித்து

வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பட்டிகை சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து என்னுடைய உரிமையிலோ உடமையிலோ இல்லாததால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**